


**சாதிக்க துணிவும், நம்பிக்கையும் மட்டுமே போதும். அதிலும் மாற்றுத்திறனாளிகள் உடல் சவால்களையும், மனச்சவால்களையும் கடந்து சாதிப்பவர்கள். அவர்களுக்கு ஒரு கோடிட்டு காட்டினாலே போதும் அவர்களே ரோடு போட்டு அதில் பயணமும் செல்வார்கள். அந்த அளவுக்கு அபார மனவலிமை உடையவர்கள் மாற்றுத்திறனாளிகள்.**

விளையாட்டு... எல்லோர் வாழ்விலும் விளையாட்டாக வாழ்க்கையை கடந்திருப்போம். ஆனால்... விளையாட்டே மூச்சாக, சாதிக்கும் சவால்களோடு எதிர் கொள்கின்றனர் மாற்றுத்திறனாளி சக்கர நாற்காலி கூடைப்பந்து வீரர்கள்.

'ஊனம் ஒரு தடையல்ல...' ஆண், பெண் பேதமில்லை. அனைவரும் ஒன்றே. வயது கூட ஒரு தடையில்லை என்று உணர்த்தும் விதத்தில் அண்மையில் சென்னையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சக்கர நாற்காலி கூடைப்பந்தாட்டப் பயிற்சிகளும், போட்டிகளும் பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது. இதில் பெண்களின் பங்கு அதிகம்.

தமிழகப் பெண்கள் பலர்





# நம்பிக்கை ஊட்டும் மாற்றுத்திறனாளிகள்..!



நித்தியகல்யாணி



பாமிதா



கனகலெட்சுமி

பரிசுகளையும், சான்றிதழ்களையும் பெற்றிருந்தார்கள்.

"எனக்குப் போலியோ வந்து கால்கள் செயலிழந்து விட்டன. எம்.ஏ. பி.எட்., படித்துவிட்டு, எம்.பி.ஏ.வும் படித்து வருகிறேன்.

மனோஜ்சோமா



இந்திராகாந்தி திறந்த நிலை பல்கலைக்கழகத்தின் தென்காசி கிளையில் வேலையும் பார்த்து வருகிறேன். ஊனம் என்று எங்களை யாரும் பார்க்கக் கூடாது என்பதற்காகவே படிப்பிலும் மற்ற அனைத்து திறமைகளையும் வளர்த்துள்ளேன். சக்கர நாற்காலி கூடைப்பந்து கடந்த ஆறு மாதமாகத்தான் பரவலாக தெரிய வருகிறது. இதுதான் என் முதல் பயிற்சியுடன் கூடிய போட்டி. இந்தப் போட்டி மூலம் எங்களுக்கு மிச்ச மீதி இருந்த தாழ்வுநிலை மாறி எங்களாலும் சாதிக்க முடியும் என்ற உத்வேகத்தை இந்த விளையாட்டு கற்றுத் தந்திருக்கிறது" என்று சொல்லும் நித்ய கல்யாணி முத்கலைப் பட்டமும், ஆசிரியர் பயிற்சியும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் 'அமர் சேவா சங்கம்' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் இருக்கிறார். இச்சங்கத்தின் மூலம் இடுப்புக்குக் கீழே செயலிழந்த எட்டு பெண்கள் சக்கர நாற்காலி கூடைப் பந்தாட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டார்கள் என்பது விசேஷமான ஒன்று.



வினோலியாவயலட்

''பிறந்த குழந்தையை எப்படி வளர்ப்பது என்பதில் பெற்றோர்களுக்கு மிகுந்த பங்குள்ளது. அதைச் செய்ய தவறும்போதுதான் என்னைப் போன்ற போலியோவினால் பாதிக்கப்பட்ட பெண்கள் உருவாகுகிறார்கள்'' என்று உருக்கமாக கூறிய வினோலியா வயலட் சென்னையில் பணிபுரிந்து வருகிறார். திருச்சியைச் சொந்த ஊராகக் கொண்ட வினோலியா கடந்த ஆறு மாதமாக இந்த சக்கர நாற்காலி கூடைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றியும் பெற்றிருக்கிறார்.

"பொதுவாக சாதாரண கூடைப்பந்தாட்டத்துக்கு என்னென்ன விதிகள் உள்ளதோ, அதே விதிகள்தான் எங்களின் சக்கர நாற்காலி கூடைப் பந்தாட்டத்துக்கும் பொருந்தும். ஆனால், அவர்கள் ஓடிக்கொண்டே பந்தை கூடையில் போடுவார்கள். நாங்கள் வீல் சேரை ஓட்டிக்கொண்டே பந்தை கூடையில் போடுவோம். இந்த வீல் சேர் எங்களைப் போன்று கூடைப்பந்து விளையாடு பவர்களுக்காக பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டவை. இந்த சக்கர நாற்காலி மூலம் ஓடிக்கொண்டே பந்தை எதிரணியினர் பிடிக்காதபடி இருக்க, ஓடும்போதே, பலமுறை வீல் சேரிலிருந்து கீழே விழவும் நேரும். இதனால், காயங்கள் படும். ஆனாலும், ஜெயிப்பது ஒன்றே எங்கள் குறிக்கோள். ஜெயித்தபின் மற்ற அனைத்து வலிகளும் பறந்து போகும்'' என்ற வினோலியா வயலட் தான் வாங்கிய பதக்கங்களைப் பார்த்தவாறே பரவசமடைகிறார்.,


மார்க் வாக்கர்

''சக்கர நாற்காலி கூடைப்பந்து'' என்ற ஒரு விளையாட்டு தமிழகத்தில் இப்போதுதான் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. எங்களுக்கு இந்த விளையாட்டுகளில் பங்கெடுக்க ஆசை இருந்தாலும் எங்கள் பொருளாதாரம் எங்களை பின்னோக்கித் தள்ளிவிடும். ஒரு வீல் சேரின் விலை தோராயமாக 25 ஆயிரத்தில் இருந்து 50 ஆயிரம் வரை இருக்கிறது. அப்படி இருக்கும்போது எங்களால் வீல் சேரை சொந்தமாக்க முடியாது. ஸ்பான்சர்கள் அன்றைய ஒருநாள் மட்டும் தந்து உதவுகின்றனர். அரசாங்கம் இந்த விளையாட்டை ஊக்குவித்து எங்களுக்கு உதவி செய்தால் நாங்களும் நிச்சயம் சர்வதேச அளவில் வெற்றி பெறுவோம்'' என்றார் பாமிதா.

'சாதாரண கூடைப்பந்து விளையாட்டில் இருக்கும் விதிகளின்படி இருந்தாலும் இவ்விளையாட்டில் அடிக்கடி வீல் சேரை நேரடியாக மோதும்போதும், பந்தை பிடிக்கும் வேகத்தில் செல்லும் போதும் கீழே விழ நேரிடும். உடல் வலிமையோடு, மன வலிமையும் மிக மிக அவசியம்'' என்றார் சென்னை ஈகிள்ஸ் அணியின் தலைவர் தினேஷ் பாபு.

"இதுபோன்ற விளையாட்டுக்கள் எங்களுக்கு தனி ஊக்கத்தையும், புத்துணர்ச்சியையும் தருகிறது. அன்றாடம் அனைவரும் அற்பமாக பார்க்கும் பார்வையிலிருந்து விலகி ஒருநாள் இதுபோன்று ஆண், பெண் என இருபாலருடனும் இணைந்து விளையாடும்போது அங்கே சமத்துவமும், ஆண்களுக்கு நாங்கள் சளைத்தவர்கள் என்ற



தன்னம்பிக்கையும் வளர்கிறது'' என்றார் கனகலெட்சுமி.

இதில், தமிழ்நாடு, டெல்லி, கேரளா, பெங்களூர், புனே, சென்னை போன்ற பல்வேறு இடங்களில் இருந்து 300-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் அதிகமான பெண்களை உள்ளடக்கியது தமிழ்நாடு அணிதான். போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள், விபத்தினால் ஒரு காலை இழந்தவர்கள், முதுகுத்தண்டுப் பிரச்சனையால் இடுப்புக் கீழே செயல் இழந்தவர்கள், லாரி ஓட்டும்போது விபத்துக்குள்ளாகி கால்களை இழந்தவர்கள், மரத்திலிருந்து விழுந்து கால் முடமானவர்கள், ராணுவத்தில் பணியாற்றும்போது கால்களை இழந்தவர்கள் எனப் பல்வேறு விதமான வர்கள் இந்த விளையாட்டில் கைகோர்த்து நிற்கும் களமாக இந்தச் சக்கர நாற்காலி கூடைப்பந்தாட்டம் இருந்து வருகிறது.

இந்த விளையாட்டை சென்னையில் முன்னால் கூடைப்பந்தாட்டத்தின் தலைவர் தனது மனைவி பிரசன்னாவுடன் இணைந்து இலவசமாக பயிற்சி அளித்து வருகிறார்.



தினேஷ் பாபு

ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த மார்க் வாக்கர் அமெரிக்காவின் பயிற்சியாளர் நேபால், லண்டனிலிருந்து மனோஜ் சோமா உட்பட்ட சர்வதேச பயிற்சியாளர்கள் சக்கர நாற்காலி கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கு பிரத்யேக பயிற்சி கொடுத்து ஊக்கமளித்தனர்.

'சாய்ஸ்' என்ற சர்வதேச விளையாட்டு மேம்பாட்டு நிறுவனம் சக்கர நாற்காலி கூடைப்பந்தாட்ட பிரியர்களுக்காக இந்தியாவில் முதல் முறையாக சென்னையில் இந்தப் போட்டியை நடத்தியுள்ளது.